**Ministry of Education**

Minister

315 Front Street West
Toronto ON  M7A 0B8

**Ministère de l'Éducation**

Ministre

315, rue Front Ouest
Toronto ON  M7A 0B8

Ontario

அன்பான பெற்றோருக்கு,

எங்களின் அரசாங்கம் இந்த மாகாணத்தில் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ததிலிருந்து சரியாக இரண்டு வாரங்களுக்குப் பிறகு இன்று நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

இந்தக் காலகட்டம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கஷ்டமானதாக இருக்கிறது என்பதையும், குறிப்பாக கோவிட்-19 பெரும் நோய்த்தொற்றின் தாக்கங்கள் உங்கள் அன்றாட வாழ்க்கையிலும் வாழ்வாதாரங்களிலும் அதிகமான விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது என்பதையும் நான் அறிவேன்.

கோவிட்-19 பெரும் நோய்த்தொற்றுக்கு எதிரான போராட்டம் எளிதானதாக இருக்கவில்லை, ஆனால் இந்தப் பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான நமது முயற்சியில் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நிரூபித்துக் காட்டியுள்ள துணிச்சலும் உறுதியும் நம்பமுடியாத அளவுக்கு தொடர்ந்து எனக்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது.  அமைச்சரவை பொதுப் பாடசாலைகளை மூடும் முடிவை மார்ச் 12 அன்று எடுத்ததிலிருந்து, எங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்காக அரசு மற்றும் தனியார் திணைக்களங்கள் எடுக்கும் படிப்படியான நடவடிக்கைகளை நாங்கள் பார்க்கிறோம்.

கல்வி அமைச்சர் என்ற முறையில், உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியமும் பாதுகாப்பும் எங்கள் அரசாங்கத்தின் பிரதான முன்னுரிமையாக உள்ளது என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறேன்; அதை விட முக்கியமானது வேறு எதுவும் இல்லை. நாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் உங்கள் பிள்ளைகளின் நலவாழ்வைப் பாதுகாப்பதற்கான அடிப்படைப் பொறுப்பையே மூலாதாரமாகக் கொண்டுள்ளன. பாடசாலை மூடப்பட்டுள்ள இக்காலகட்டத்தின் போது நீங்களும் உங்கள் பிள்ளைகளும் காண்பித்துள்ள ஆழ்ந்த புரிதல் மற்றும் நெகிழ்வுத்தன்மைக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

அந்தப் பொறுப்பை மனதிற்கொண்டு, இன்று நமது அரசாங்கம் மாகாணத்தில் உள்ள அரசுப் பாடசாலைகள் அனைத்தையும் மே 4-ஆம் திகதி வரையிலும், பிள்ளைப் பராமரிப்பு மையங்கள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஏப்ரல் 13-ஆம் திகதி வரையிலும் மூடுதலை நீட்டிப்பது என முடிவெடுத்துள்ளது. சாதாரண நேரங்களில் இது ஒரு சிரமமான முடிவாக இருந்திருக்கும். ஆயினும், இது உங்களுடைய மற்றும் உங்கள் பிள்ளையின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொள்ளும்போது மிக அவசியமானது என ஒன்ராறியோ சுகாதாரத் திணைக்களத்தின் தலைமை மருத்துவ அதிகாரி ஒப்புக்கொண்டதால், இந்த முடிவு தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருந்தது.

இந்த அறிவிப்பு பொது சுகாதாரத் திணைக்களத்துடன் ஒத்துப்போகின்ற அதேநேரம், பாடசாலையில் கற்பித்தல் நடைபெறாது என்பதால் வரவிருக்கும் வாரங்களில் உங்கள் பிள்ளைகள் அவர்களுடைய கல்வி தொடர்பாக என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பற்றிய கேள்விகளை இது எழுப்பும் என்பதை நான் அறிவேன்.

இன்று, நமது அரசாங்கத்தின் அடுத்த கட்டத் திட்டமாகிய வீட்டிலிருந்து பயிலுங்கள் Learn at Home திட்டம் பற்றியும், இந்தக் காலகட்டத்தில் மாணவர்களையும், குடும்பங்களையும், கல்வியாளர்களையும் நாங்கள் எவ்வாறு ஆதரிக்கிறோம் என்பதையும் அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

.../ப2

தொடங்குவதற்கு, ஏப்ரல் 6 ஆம் திகதி திங்கள்கிழமைக்குள், ஆசிரியரால் வழிநடத்தப்படும் கற்றல் மாகாணம் முழுவதும் மீண்டும் தொடங்கும் என்று பாடசாலைச் சபைகளுக்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம். இந்தக் காலகட்டத்தில் உங்கள் பிள்ளை தொடர்ந்து கற்றுக்கொள்ள சிறந்த வழியைத் தீர்மானிப்பதற்காக தங்கள் ஆசிரியர்களிடமிருந்தும் பாடசாலைச் சபை ஊழியர்களிடமிருந்தும் மாணவர்கள் தகவல்தொடர்புகளைப் பெறத் தொடங்குவார்கள். குறிப்பாக, எங்களுடைய இளம் மாணவர்களுக்கு, அவர்கள் கல்வியாளர்களுடன் தொடர்புகொள்ளத் தொடங்கும்போது இந்த ஆரம்ப உரையாடல்களை தங்குதடையின்றி மேற்கொள்ள உதவுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மாணவர்களும் இந்த இணையம் வழிக் கற்றல் உத்தியில் சுறுசுறுப்பாகவும் முழுமையாகவும் பங்கேற்பதை இந்த ஆரம்பத் தகவல்தொடர்பு உறுதிசெய்ய உதவும். தற்போது வீட்டில் இருக்கும் தொழில்நுட்பம் மற்றும் வளங்களின் அடிப்படையில் உத்திகளை நாங்கள் வடிவமைத்துள்ளோம்.

இணையம் வழிக் கற்றலில் முழுமையாகப் பங்கேற்கத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் broadband இணைப்புக்கான அணுகல்மாகாணத்தில் உள்ள பல குடும்பத்தவர்களிடம் இல்லை என்பதையும் நான் அறிவேன். இந்தச் சூழ்நிலைக்குத் தீர்வு காண, வீட்டில் கணினி வசதி இல்லாத மாணவர்களுக்கு உள்ளூர்ப் பாடசாலைச் சபைகள் தங்களிடம் தற்போது இருப்பில் இருக்கும் கணினிகளையும் சாதனங்களையும் கொடுத்து உதவுமாறு எங்களின் அரசாங்கம் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. தொழில்நுட்பம் தேவைப்படுபவர்களுக்கு அதை விரிவுபடுத்துவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்க சபைகள் அமைச்சகத்துடன் இணைந்து செயல்படும். ஒன்ராறியோவின் உலகின் தலைசிறந்த இணையவழிக் கற்றல் வளங்களை குடும்பங்கள் அணுக உதவுவதற்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தீர்மானிப்பதற்கு தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் தொடர்ந்து உரையாடல்களில் ஈடுபடுவது உட்பட, மாணவர்கள் தொழில்நுட்பங்களை அணுகுவதற்கான மாற்று வாய்ப்புகள் குறித்து சபைகள் ஆய்வு செய்துள்ளன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சரியாக இணைப்புக் கிடைக்காத கிராமப்புற மற்றும் தொலைதூரத்திலுள்ள சமூகங்களுக்கு இது மிகவும் அவசியம். தொழில்நுட்பம் மற்றும் broadband வாய்ப்புகள் தொடர்பான இந்த உரையாடல்கள் தொடர்ந்து நிகழும்போது அது பற்றிய தகவல்களை நான் உங்களுக்கு அவ்வப்போது தெரிவிப்பேன்.

இணையம் வழி கற்றலுக்கான இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கற்றல் உபகரணங்கள் மற்றும் உங்கள் மாணவரின் ஆசிரியரால் ஒதுக்கப்பட்ட வேலையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் மாணவரின் வேலை நேரத்திற்கான குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளை எங்களின் அரசாங்கம் கோடிட்டுக் காட்டியுள்ளது. ஒவ்வொரு ஆசிரியருக்கான இந்த எதிர்பார்ப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- •மழலையர் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை: கணிதம் மற்றும் எழுத்தறிவில் கவனம்செலுத்தும் வகையில், மாணவர் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு ஐந்து மணி நேர வேலை.
- •4 முதல் 6ஆம் வகுப்பு வரை: எழுத்தறிவு, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூக அறிவியலில் கவனம்செலுத்தும் வகையில், வாரத்திற்கு ஐந்து மணிநேரம்.
- •7 முதல் 8ஆம் வகுப்பு வரை: எழுத்தறிவு, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூக அறிவியலில் கவனம்செலுத்தும் வகையில், வாரத்திற்கு பத்து மணிநேரம் மற்றும்.
- •9 முதல் 12ஆம் வகுப்பு வரை: செமஸ்டர் மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு பாடத்திற்கு மூன்று மணி நேரம், மற்றும் செமஸ்டர் அல்லாத மாணவர்களுக்கு ஒரு பாடத்திற்கு வாரத்திற்கு 1.5 மணிநேர பாடம். இவை credit சேர்ப்பு மற்றும் வகுப்பைப் பூர்த்திசெய்தல் என்பவற்றில் கவனம்செலுத்தும் வகையில் இருக்கும்.

இந்த எதிர்பார்ப்புகளின் அடிப்படையில், LearnAtHome -இன் இந்த இரண்டாவது கட்டத்தில், மாணவர்கள் தொடர்ச்சியான கல்வி வளர்ச்சி மற்றும் அடைவைப் பெறுவதை உறுதிசெய்ய கல்வி சார்ந்த ஒழுக்கத்தையும் அர்ப்பணிப்பையும் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். எங்கள் மாணவர்களால் இதைச் செய்யமுடியும் என்பதை நான் அறிவேன்.

.../ப3

இவை முன்னெப்போதுமில்லாத காலங்களாக இருக்கையில், பாடசாலை மூடப்பட்டுள்ள இந்தக் காலகட்டத்திற்காக நாங்கள் உருவாக்கியுள்ள வலுவான கற்றல் திட்டத்தில் முழுமையாக ஈடுபடுவதற்கு உங்கள் பிள்ளைகளுக்கு ஆதரவும் உதவியும் வழங்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். உங்கள் ஆதரவும், உத்வேகமும், ஊக்குவிப்பும் உங்கள் பிள்ளைகள் அவர்களுடைய கற்றல் பயணத்தில் வெற்றிபெற தொடர்ந்து அவர்களைத் தயார்படுத்தும்.

இந்தக் காலம் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்யும் குழுவில் இடம்பெற்றுள்ள மாணவர்களின் பெற்றோருக்கு கவலையளிப்பதாக இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். நான் முன்பே கூறியுள்ளேன், இப்போது இதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்: கோவிட்-19 தொற்றுப்பரவல் காரணமாக எந்தவொரு மாணவரின் பாடசாலைக் கல்விப் பூர்த்தி பாதிக்கப்படமாட்டாது. கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், மற்றும் பின்-இடைநிலைக் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு Ross Romano, உடன் நான் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறேன். செப்டம்பர் 2020-இல் கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குத் திட்டமிட்டுள்ள மாணவர்கள், அந்த இலக்கை அடைவதற்கு எங்கள் முழுமையான ஆதரவைப் பெற்றுள்ளார்கள் என்பதை எங்களின் அரசாங்கம் உறுதிசெய்யும்.

இந்த மூடுதல் காலத்தின்போது மாணவர்கள் தொடர்ந்து கிரெடிட்கள் பெற்று வருவதால், வரவிருக்கும் வாரங்களில் பின்-இடைநிலைக் கல்வி விண்ணப்பத்தின் செயலாக்கத்தில் மாணவர்கள் எவ்வாறு தம்மை இசைவாக்கிக் கொள்ள முடியும் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களை நாங்கள் வழங்குவோம்.

சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு இந்தக் காலகட்டத்தின் போது வீட்டிலிருந்து கற்றல் பற்றியும், கல்வி ஆதரவு ஊழியர்கள் மற்றும் வளங்களை நேரில் அணுக முடியாதது பற்றியும் கவலைகள் உள்ளன என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அனைத்து மாணவர்களும் தொடர்ச்சியான கற்றல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற எல்லா விதமான ஆதரவுகளையும் தொடர்ந்து பெறுவதை உறுதிசெய்வதற்கு நான் உறுதியாகவும் எந்தவித ஐயத்துக்கு இடமின்றியும் உறுதியெடுத்துள்ளேன்.

மாணவர்களுக்கு வல்லுநர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்தும் விதமாக கல்வி உதவியாளர்கள், துணை வல்லுநர்கள் மற்றும் பிற கல்வித்துறை ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும், இடையிலான தகவல்தொடர்பை உடனடியாக மீண்டும் தொடங்குமாறு சபைகளுக்கு எங்களின் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. இந்த முன்னொருபோதும் இருக்காத காலகட்டத்தின் போது எந்தவொரு மாணவரும் கவனிக்கப்படாமல் போவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இணையவழி அமைப்பில் மாகாணத்தில் கற்பவர்கள் அனைவரினதும் வாய்ப்புகளையும் அடைவுகளையும் அதிகரிப்பதற்கு அவர்களுக்குத் தேவைப்படுகின்ற கருவிகளையும் ஆதரவுகளையும் எனது அமைச்சகம் கல்வியாளர்களுக்கு அளித்துவருகிறது.

கோவிட்-19 தொடர்பான பெரும்பாலான உரையாடல்கள் உடல்நலம் மீது ஏற்படும் தாக்கங்களை மையப்படுத்தியதாக இருந்தாலும் கூட, இந்தப் பெரும் நோய்த்தொற்றுன்ராறியோ குடிமக்களின் மனநலத்தில் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தவே செய்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, இளம் மாணவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு, குடும்பங்களுக்கு, நண்பர்களுக்கு மற்றும் சமுதாயங்களுக்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்துகொள்வதில் சிரமங்களைக் கொண்டிருக்கலாம். இது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் கூட, இந்நேரத்தில் உங்கள் பிள்ளை பயம் மற்றும் பதட்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பல கேள்விகள் இருக்கும் அதேவேளையில், இக்காலகட்டத்தின் போது பிள்ளைகள் எதிர்கொள்ளும் எண்ணிறந்த உணர்ச்சிகளையும் எதிர்வினைகளையும் விளங்கிக்கொள்ளவும் சமாளிக்கவும் உதவுவதற்கு பலவிதமான உதவிகள் கிடைப்பதை அவர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள் என்ற எனது இதயப்பூர்வமான நம்பிக்கையை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். மனநல ஊழியர்களும் வல்லுநர்களும் மாணவர்களுடன் ஒரு பத்திரமான மற்றும் பாதுகாப்பான உரையாடலில் உடனடியாக ஈடுபடுவதற்குத் தயாராக இருப்பதை உறுதிசெய்யுமாறு எங்களின் அரசாங்கம் பாடசாலைச் சபைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. மாகாணம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு முழுமையான ஆலோசனை மற்றும் வளங்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வியக்கத்தக்க வேலைகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிக்கிறோம்.

../ப4

மனநலப் பிரச்சனைகள் அல்லது மனவேதனையை எதிர்கொள்ளும் பிள்ளைகளுக்கு அவசியமான மற்றும் தொழில்முறையிலான ஆதரவு வழங்குகின்ற பல நிறுவனங்கள் எங்களிடம் உள்ளன.  உதாரணமாக Kids Help Phone மாகாணம் முழுவதும் 24/7 ஆலோசனை மற்றும் பரிந்துரைச் சேவைகளை வழங்குகிறது.  இந்த இலவச வளமூலத்தைப் பயன்படுத்துவதற்கு, பிள்ளைகள் 1-800-668-6868 என்ற இலக்கத்தில் அழைக்கலாம், அல்லது 686868 என்ற இலக்கத்துக்கு CONNECT என குறுஞ்செய்தி அனுப்பலாம்.

பாடசாலை மூடலின் அடுத்த கட்டத்தில் நாம் காலடி எடுத்து வைக்க இருப்பதால், பெற்றோர்கள், பாதுகாவலர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் எனது அமைச்சகத்தின் எதிர்பார்ப்புகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கும். எண்ணற்ற ஊக்கமிக்க மற்றும் உறுதியான மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வித் துறை ஊழியர்களை மாகாணம் முழுவதும் ஏற்கனவே சந்தித்திருப்பதனால், எதிர்வரும் சவால்களை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் அறிவேன்.

மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாணவரும் ஒன்ராறியோவின் உலகத் தரம் வாய்ந்த கல்வி அமைப்பில் தொடர்ந்து கற்பதை உறுதிசெய்யும் எனது நேர்மையான மற்றும் தடுமாற்றமில்லாத உறுதிப்பாட்டை நான் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும், தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நேரத்தில் நமது எதிர்காலத் தலைவர்களை ஊக்குவிப்பதற்கும், ஆதரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் எங்கள் கூட்டு அர்ப்பணிப்பு தடுமாற்றமில்லாததாக இருக்கிறது.

தங்கள் உண்மையுள்ள,

மாண்புமிகு Stephen Lecce,
கல்வி அமைச்சர்